
# இலட்சியப் பாதையில்



செல்வி. ஷறீகா சிவநாதன்

# இலட்சியப் பாதையில்



- ஷறீகா சிவநாதன்

# இலட்சியப் பாதையில்

(கவிதை நூல்)

**செல்வி. ஷறீகா சிவநாதன்** ©

Author: Shariga Sivanathan
Lüdighausenerstr- 12A
59379 Selm
E-mail add.: shariga@gmx.net

ஔ பதிப்பகம்

✦ முதல் பதிப்பு : **ஜனவரி 2011** ✦ நூல் வடிவமைப்பு : **கார்த்திக் கிராபிக்ஸ்,** பேச: **098411 27006** ✦ அச்சமைப்பு : **ஸ்பீட் பிரிண்ட்** , பேச : **090944 55700** ✦ வெளியீடு : **ஔ பதிப்பகம்**, நெ.25, ஸ்ரீனிவாசா ரோடு, மயிலாப்பூர், சென்னை-600004. பேச : **099413 04103, 044-24660442** ✦ விலை **ரூ.60/-**

# அறிமுக உரை

செல்வி ஷறீகா சிவநாதனின் கவிதை நூலுக்கு அறிமுக உரை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். ஜேர்மனிய மொழியை வாழிட மொழியாகக்கொண்ட ஷறீகா தமிழ்மொழியையும்கற்றிருப்பது பெருமைதருவது. தமிழ் மொழியில்இலக்கிய ஆக்கம்செய்யும்அவர் முயற்சி பாராட்டுக்குரியது. அவர் லண்டன் தமிழ் வானொலியில் அறிவிப்பாளராகவும் யேர்மனியசெய்தித் தொகுப்பாளராகவும் இருக்கிறார். டோட் முண்ட் தமிழ்ப் பாடசாலையில் தமிழ் ஆசிரியராகவும் இளம் ஆசிரியப் பயிற்றுனராகவும் கடமையாற்றுகிறார். ரெனிஸ். மெய் வல்லுனர் விளையாட்டுத்துறையில் விளையாட்டாளராகவும் பயிற்சியாளராகவும் கழகத்திலும் பாடசாலையிலும் இருக்கின்றார். ஜேர்மனிய பத்திரிகைகளுக்கு கவிதைகள், கட்டுரைகள் எழுதுகிறார்.

அவர் எழுதிய கவிதைகளை நூலாகப் பதிவு செய்து வெளியிடுவது காலத்தின் தேவை. 300 கவிவரிகள் இந்நூலிலே உள்ளன. அறிவியல் வாழ்வியல் தொடர்பான கவிகளும் உள்ளன. அத்துடன் அவர் எழுதிய டொச் மொழிக் கவிகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. டொச் மொழியின் அனுபவமொழிகளும் கவிதைகளிடையே இடம் பெறுகின்றன.

புலம்பெயர்ந்து வாழும் தமிழரின் தலையாய பணியை ஷறீகா முன்னெடுத்துள்ளார். அவரது இயல்பான ஆற்றல்கள் இப்பணியைச் செய்வதற்கு உறுதுணையாக நிற்கின்றன. புலம் பெயர்ந்த தமிழர் தமிழ் மொழியைப் புறம் தள்ளிவிடுவர் என்னும் கருத்தலைகள் காற்றில் மிதந்து வரும் வேளையில் ஷறீகா ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறார்.

இவருடைய ஆக்கங்கள் மேலும் செம்மையடைய வேண்டியவை. மேலும் செவ்வியல் தமிழிலக்கியக் கவிதைகளை ஜேர்மன் மொழியிலே மொழிபெயர்க்கும் பணியையும் ஷறீகா முன்னெடுக்க வேண்டுமென ஆசி வழங்குகிறோம். அவரைத் தொடர்ந்து ஜேர்மனியில் வாழும் இளந்தலைமுறையும் இலக்கியப் பணியை மேற்கொள்ள வேண்டுகிறோம். காலம் தந்த களத்தையும் வாய்ப்பையும் கருத்திற் கொண்டு தமிழப் பணியை எல்லோரும் மேற்கொள்ள வேண்டும்.

(எம்மை) நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
யாழ் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர்
Ph.D (Edinburgh)

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் M.A- Ph.D
காகுசுயன் பல்கலைக்கழகம் யப்பான்
Fomer Researcher Lecturer

# அணிந்துரை...

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்பார்கள். இங்கே நான் காண்பது புலியின் குட்டியை அல்ல அதனையே முறியடிக்கும் திறமை வாய்ந்த பாயும் புலியினை. நகுலா சிவநாதனின் மகள் என்று இனிமேல் சொல்லத் தேவையில்லை. ஷரீகா சிவநாதன் என்றால் யார் என்பதை உலகறியும் திறன் பெற்று ஓங்கி உயர்ந்து நிற்கிறார் இந்த வளரிளம் பருவத்துச் செல்வி.

அவர் ஒரு திறமையின் தேக்கிடம் எனும் அளவிற்கு சகல துறைகளிலும் தன் ஆற்றலைப் புலப்படுத்தி நிற்கிறார். விளையாட்டாக இருக்கலாம், நீச்சலாக இருக்கலாம், கல்வியாக இருக்கலாம், தமிழ் அறிவுத்திறன் மாத்திரமல்லாமல் சமய அறிவாக இருக்கலாம் அவர் தொட்டதுறைகள் எல்லாம் அவரது புலமையை எடுத்துக் காட்டுபவையாக அமைகின்றன. இத்தனை ஆற்றலா? எதிலும் முதலாவதாய் நிற்கிறாரே என நம் வாயினைப் பிளக்க வைக்கிறார் இந்த எழில் மங்கை. இந்தச் சிறுவயதினிலேயே அவர் வானொலி அறிவிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக, நடனம் பயிற்றுனராக ஏன் தமிழ் ஆசிரியையாய் துலங்குகிறார் என்றால் நகுலா- சிவநாதன் தம்பதிகள்

ஈன்ற பொழுதிற் பெரிதுவப்பவர்களாகவே இருக்க வேண்டும்.

அவரது கவிதைகளிலே இளைய தலைமுறையினரின் மனப் பாங்கு தெட்டெனத் தெளிவதாக உள்ளன. கற்பனை வளம் புரண்டோடுவதைக் காணமுடிகிறது. தமிழ் கொஞ்சி விளையாடுகிறது. உதாரணமாக கடலின் அளவிலே! என்ற கவிதையைப் பாருங்கள்.

கடலின் அளவிலே!

கடலின் அளவிலே மனம் இருக்கும்
அதில் கவலையும் மகிழ்வும் வந்து போகும்
கடலின் ஆழத்திலே அறிவிருக்கும்
அதைக் கண்டுபிடிப்பதிலே வாழ்விருக்கும்
கடலின் ஓடத்திலே முயற்சியிருக்கும்!
அதை வென்று காட்டுவதிலே
உன் இலக்கிருக்கும்!
அலை மோதிடும்போது பரீட்சையிருக்கும்!
அதில் தேர்ச்சி அடைவதிலே
உன் எண்ணம் இருக்கும்!

ஷறீகாவின சிந்தனை சாதாரண அவர் வயதுப் புலம் பெயர்ந்த ஏனைய கட்டிளம் பருவத்தினரைப் போல் அல்லாது செழுமையானதாக இருப்பதைக் காண மனம் இன்புறுகிறது. தமிழை ஆராதிக்கிறாராம். அதேசமயம் ஏனைய மொழிகளையும் கற்கின்றாராம். இவ்விதமாக பலமொழிகளைக் கற்பதனால் ஒப்பீட்டு அளவிலே தெரிந்து கொள்வதால் அவருக்குப் பன்மொழித்திறமை ஏற்படும் . அதன் மூலம் தமிழுக்கும் ஏனைய மொழிகளுக்குமிடையே காணப்படும் ஒற்றுமைகளை அறிந்து அதனை மேற்குலக மக்களுக்குக் காலக் கிரமத்தில் எடுத்துச் சொல்லும் ஆற்றல், அவர்களுக்கு எமது மொழி பற்றி அறிய வேண்டிய உணர்வு, நமது கலாசாரத்தின் தொன்மை, அதனைக் கைக்கொள்வோருடைய மனப் பக்குவம் பற்றி ஏனைய சமூகத்தவருக்கு எடுத்துச் சொல்லும் ஆற்றல் ஷறீகா பெறுவார் என்பதில் சிறிதேனும் ஐயுற வேண்டிய தேவையில்லை. நாம் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழை வாழவைக்க ஷறீகா போன்றோர் வாழவேண்டும்.

அழகு தமிழே உன்னை ஆராதிக்கின்றேன்!
அழகே தமிழே பேசி மகிழ்கிறேன்!
அன்னைத் தமிழிலே உயர நினைக்கிறேன்!
ஆழ்ந்து உன்னைப் படிக்க முனைகிறேன்!
ஆண்டு 12 இல் கால் பதிக்கிறேன்!
இனிய மொழியை வாழ்வில் இணைக்கிறேன்!
இனிதாய் அதனை பேசி மகிழ்கிறேன்!
வேற்றுமொழிகளுடன் சேர்த்துப் படிக்கிறேன்!
ஆதனால் அதிலே தேர்ச்சியும் அடைகிறேன்!

ஷறீகா தனது அறிவினை எப்படி இத்தனை சிறப்பாக வளர்த்தார். வெறும் பாடசாலைப்படிப்பு அவரின் பன்முகத் திறமையை வளர்க்க உதவியிருக்குமா? பெற்றோர்களாகிய நகுலா மற்றும் சிவநாதனால் வழங்கப் பட்ட உற்சாகமூட்டும் சூழல் (Motivating Environment) வழங்கிற்றா? ஆம் இவற்றுடன் ஷறீகாவினது தேடல் மிக முக்கியத்துவம் பெறுகிறது. கண்டது கற்றவன் பண்டிதனாவான் என்பது பழமொழி. ஷறீகாவினது சகல துறைகளிலுமான பாண்டித்தியம் எப்படி வளர்ந்தது. அவரை எழுத வைத்தது எது? அவர் புத்தகத்துக்கு நன்றி கூறுவதிலிருந்து தெரிகிறது.

புத்தகமே!

படித்து மகிழும் புத்தகமே!

பாடம் நமக்குத் தருகிறாய்!

அறிவை நாளும் வளர்க்கிறாய்!

கதைகள் கொண்டு விரிகிறாய்!

கனிவான இதயத்தை நிறைக்கிறாய்!

எண்ணம் பலவும் வளர்க்கிறாய்!

எழுத நீயும் தூண்டுகிறாய்!

ஷறீகாவினால் புலம் பெயர்ந்த தமிழ் உலகு பெருமையுறும் என்ற நம்பிக்கை எமக்கு நிறையவே உள்ளது. அவரது ஆற்றல் மேன்மேலும் வளர வேண்டும் என வாழ்த்தும் அதே நேரத்தில் அவரது படைப்புக்கள் மேலும் மேலும் வெளி வரவேண்டும் என்ற எமது ஆவலையும் புலப்படுத்தி அவரது 18வது பிறந்த நாள்விழா சிறப்பாய் அமைய வேண்டும் என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

அன்புடன்,

பொ.கனகசபாபதி

முன்னாள் மகாஜனக்கல்லூரி அதிபர்

பல்கலாச்சார ஆலோசகர் கனடா ரொறன்ரோ

# என்னுரை...

## இலட்சியப்பாதையில் உங்களுடன்...

எந்த ஒரு இலட்சியத்தையும் அடைவதற்கு அறிவாற்றலும், தன்னம்பிக்கையுமே இன்றியமையாதாகிறது. முடியாததையும் முயன்று சாதிக்கலாம் என்கின்றோம்.

ஆனால் உண்மையில் இந்த உலகத்தில் எதைப் பெரிய சாதனையாய் கொள்கிறோம்?

வருடக்கணக்காக ஆய்வுகளை மேற்கொண்டு, பல புதுமைகளை கண்டுபிடிப்பது சாதனைதான்,

பிரபல்யமான இடங்களில் தங்கப்பதங்கள், பரிசுகள் பெற்றாலும் கூட, வீட்டிலுள்ளோரிடமிருந்து பாராட்டுப்பெறுவதே உண்மையான பெரும் சாதனையாக அமைகிறது என்று நான் நினைக்கிறேன்.

இந்த நூலை உருவாக்கக்கூட எனது பெற்றோர்கள் மூலகாரணமாய் அமைகிறார்கள் என்பதில் எனக்கும் மகிழ்வே! அவர்களின் ஊக்கமும், அரவணைப்பும்,திட்டல்களுமே எம்மை வாழ்க்கைக் களத்தில் எம் இலட்சியங்களை அடைவதற்காக தொடுக்க நினைக்கும் அம்பை, வில்லின் சரியான நிலைக்கு கொண்டுவரும் உறுதுணையாயிருக்கிறார்கள்.

கல்வியெனும் ஒரு சொல்லுக்குள் இதை உணர்த்தும் மூன்று சொற்களை எப்போதாவது எண்ணிப்பார்த்திருக்கிறோமா?

கல் என்ற சொல்லுக்குள் மனதின் வலிமை மறைந்திருக்கிறது. நினைத்தது ஒன்றும் எப்போதும் அப்படியே நடந்துவிடுவதுமில்லை, உறுதுணையாய்நிற்போரும் அனைத்துக்கும் உறுதுணை போவதுமில்லை, இந்த நிலைதனில் நினைவுகளை மீட்டியே வழியொன்றை அமைத்திட வேண்டும். இதற்கு எம்மனம் வலிமை கொண்டிருக்க வேண்டுமே, நம்பிக்கையின் பிறப்பிடமுமிதுவே.

வில்லைப்போலவே பலர் சொல்லும் நல்லவற்றை எடுத்துக்கொண்டு வாழ்க்கையில் வெற்றிகாண வேண்டுமே!

கவி என்ற சொல்லையும் இதற்குள் கண்டுபிடித்து விட்டீர்களா?

கவியெழுதும் திறனே அறிவாற்றலின் அடையாளம், மனிதனும் சிந்தனையும் இயற்கையும் ஒன்றிணையும்போதுதான் கவிதையாகிறது என்றார் அன்று வில்லியம் சேக்ஸ்பியர்.

என் சிந்தையில் தோன்றியதுதான் இப்படைப்பினூடாக உங்களோடும் சங்கமமாகிறது.

அகவை ஒன்பதில் என் கவிப்பயணம் ஆரம்பமானது. London Time தமிழ் வானொலியின் காற்றலையூடாக எழுத ஆரம்பித்தேன். பின்னர் IBC வானலை, TRT வானலை, கனடா கீதவாணி வானலைகளூடேயும் வெற்றிமணி பத்திரிகை, மண் சஞ்சிகை போன்ற ஊடகங்களூடேயும் என் கவிகளை சரமாக தொடுத்து வாசிக்கவும் சுவாசிக்கவும் திறன்கள் கிடைத்தன. இவையே என் கவிகளை ஊக்கமுடன் படைக்க உறுதுணையாகிய களங்கள் ஆகின.

நீ சமூத்திரங்களை கடக்க முயன்றால், நீரைப்பார்த்துக்கொண்டிருப்பதால் முடியுமாவென இரவீந்திரநாத் தாகூர் கேட்டதைப்போன்றே என்னிடம் என் தாயார் பேனாவைக்கொடுத்து முயற்சி செய்யச் சொன்னார்.

இப்படித்தான் எனது பயணமும் ஆரம்பம் கண்டு இலண்டன் தமிழ் வானொலியின் காற்றலையூடாக எழுத ஆரம்பித்து என் கவிகள் சிறு இளம் நாற்றுகளாக உங்கள் முன் காட்சி தருகின்றன.

நடா மோகன் மாமாவின் தட்டிக்கொடுப்பாலும் மேலும் மேலும் கவிதைகள் எழுத ஆர்வம் பிறந்தது. என் பெற்றோரின ஊக்கமும், வானலை உறவுகளின் பாராட்டுமே என்னை இப்படியோர் முதற் சாதனைப்படியை அடையவைப்பதற்கான காரணம் என்கிறேன்.

என் கவிதை நூலுக்கு அறிமுகவுரை அழகாக வரைந்த தந்த மதிப்புமிக்க பேராசிரியர் திரு.திருமதி சண்முகதாஸ் அவர்கட்கும், அணிந்துரையை அழகிய தமிழில் சிறப்பாக எடுத்துத் தொடுத்து தந்த கனகசபாபதி அதிபர் அவர்கட்கும், வாழ்த்துரையை வளமான தமிழில் வடித்த வெற்றிமணி ஆசிரியருக்கும் நன்றிதனை என்றென்றும் வழங்குகின்றேன். உங்கள் அனைவரின் வாழ்த்தும் என்னை என்றும் தமிழோடு இணைய வைக்கும்.

என் கவிகளை நூலாக்க உதவிய சக்கரவர்த்தி மாமாவுக்கும், உடையார் மாமாவுக்கும் என் பெற்றோருக்கும் இதயத்து நன்றியைத் தெரிவிக்கிறேன்.

விதியை நினைத்து ஏமாறாதே!

விதியென்பது உன்கையில்தான் கிடக்கிறது,அதற்காக காத்திருக்காமல்,

இன்றே அதை வென்றிடு! வாழ்கையின் திறப்பு உன் கையில் மாத்திரமே!

வாழ்க்கையை நேரத்துக்குள் சுழலவிடு, பனித்துளி இலையின் நுனிப்பகுதியில் நடனமாடுவதைப்போல..!

கடுமையாய் முயன்றதும் உழைத்ததும் ஒருபோதும் வீணாகாது, நியூட்டன் தாகூர் கூறியதைப் போன்றே, ஓர் நதி கடலுக்குள் கலப்பதைப்போன்றே, எமது உழைப்பின் வெற்றி,

நமது முயற்சியின் ஆழத்திலிருக்கிறதே.

அன்புடன்

**செல்வி. ஷரீகா சிவநாதன்**

# இலட்சியப்பாதைகளின் பக்கங்கள் விரியட்டுமே!



## கருணையை பொழியும் கணபதியே!

கருணையை பொழியும் கணபதியே!
துணையாக என்று நிற்பாயே!
மூன்றுமுறை நெற்றியில் கொட்டி
தோப்புக்கரணம் இட்டு வணங்கும் - தெய்வமே!

ஐந்து கரங்கள் கொண்டதனால் ஐங்கரன்
எனப்பெயர் பெற்றாயோ?
பிள்ளைகளுக்கு தெய்வமாய்
பிள்ளையார் ஆனாயோ?

வினை தீர்க்கும் விநாயகனே!
சித்தி தரும் சித்திவிநாயகனே!
உன்னை வணங்கினால் வெற்றியே என்றும்!

## அழகு தமிழே உன்னை ஆராதிக்கின்றேன்!

அழகு தமிழே உன்னை ஆராதிக்கிறேன்!
அன்னைத் தமிழிலே உயர நினைக்கிறேன்!
ஆழ்ந்து உன்னைப் படிக்க முனைகிறேன்!
ஆண்டு 12 இல் கால் பதிக்கிறேன்!
இனிய மொழியை வாழ்வில் இணைக்கிறேன்!
இனிதாய் அதனை பேசி மகிழ்கிறேன்!
வேற்று மொழிகளுடன் சேர்த்துப் படிக்கிறேன்!
அதனால் அதிலே தேர்ச்சியும் அடைகிறேன்!



## சரித்திரத்தில் சாதனையாய்!

மாவீரரை நினைவிலே தாங்கி!
மலர்ந்திட்டதே சென்ற வாரம்!
மறக்க முடியாத வாரமாய் அமைத்திட்டதே!
மனதிலே அவர்களை நினைக்கவும் வைத்ததுவே!

தமிழீழ மண்ணை காக்க!
புறப்பட்ட வீரர்களின் தியாகம்!
சரித்திரத்தில் சாதனையாய் பதிந்திட்டதே!
சாவிலும் அவர்கள் சரிவதில்லை!

எடுத்திட்ட முயற்சியும் பயனற்று போவதில்லை!
இலட்சியம் என்றுமோ தோற்பதில்லை!
இலட்சியக்கனவுகள் காற்றோடு மறைவதில்லை!
இருளும் எப்போதும் நீள்வதுமில்லை!
இலண்டன் தமிழ் வானொலியின் காற்றலையூடே!
காவி வந்தனரே நினைவுகளை யன்று!
எம்மவர் படைப்புக்களாய் மிளிர்ந்திட்டதே!
எம்மவர் மனங்களிலும் சிறப்பாய் பதிந்திட்டதே!

## அதிரவைக்கும் ஜனாதிபதி ஓபாமாவே!

எம்மால் முடியும் என்ற வாசகத்தாலே!
எம்மையும் இப்போ தன்வசம் ஈர்த்துவிட்டாரே!
எண்ணிய காரியமும் செயலாய் மாறியதே!
எங்கிருந்த தேசியதினமும் இவருக்காய் மாறியதே!

வரலாறு ஒன்றை படைத்து நின்றாரே!
வரவிருக்கும் மாற்றங்களை எதிர்கொள்ள வைத்தாரே!
வரவேற்பு பலரிடம் இப்போதே பெற்று விட்டார்!
வரவிருக்கும் ஜனாதிபதியாய் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்!

அமெரிக்க-தேர்தலை விறுவிறுப்பாய் ஆக்கினாரே!
அவர் பக்கம் பலரை திருப்பவைத்தாரே!
அனைவருக்கும் உதாரணமாய் திகழ்கிறாரே இப்போ!
அமெரிக்க வரலாற்றிலே முதல் கறுப்பின தலைவராயானாரே!

கற்றதனால் நிச்சயமாய் கிடைக்கும் பயனென்றாரே!
கனவுகளை, நனவாக்கி காட்டலாம் என்றாரே!
சிகாகோ, நகரிலே வாழும் ஓபாமா தானே!
சிறியவர் எம்மையும் சிந்திக்க வைத்தாரே!




## சொன்னது சரிதானா...

சொன்னது சரிதானா?
செய்தது சரிதானா?
பின்னுக்கு வந்த சிந்தனை!
பிணைந்ததே மூளையை!

சொல்லும்போது இருந்திட்டதே!
சொன்னபின்பு விலகி விட்டதே!
சிந்திக்க எம்மை தூண்டியதே!
சிந்தனையும் சிதறிட்டதே!

சொன்னதை கேட்டுவிட்டால்!
சொன்னதுபோல் நடந்து விட்டால்!
பலரை மகிழ்ச்சிப்படுத்துவோமே!
பொங்கிடுமே மகிழ்ச்சி எமக்குள்ளே!



## ஒருமுறை, ஓரே ஒரு முறை!

ஒருமுறை மாத்திரம் வந்திடும் நிகழ்வுகள்!
ஓரே ஒரு முறை அதை பார்த்திட நினைக்கும்!
மெல்ல செல்லும் மணித்துளியின் முக்கியம்!
சென்ற பின்பு ஒருமுறை எண்ணும்!

ஒருமுறை கண்டதை மீண்டுமே!
ஓரே ஒரு முறை காணத்துடிக்குமே!
ஆசைகள் பலதும் பறந்திடுமே மனதுக்குள்ளே!
ஆட்டிப்படைத்திடுமே எம்மை சிலவேளை!

பல உலகங்கள் மறைந்திருக்கும் ஒருவருக்குள்ளே!
பலதை முயற்சி செய்யவும் வைத்திடுமே!
ஒருமுறை முயற்சி தழுவி விட்டால்!
ஓரே ஒருமுறை முயற்சி செய்திட வேண்டுமே!

பயிற்சி இன்றி வெற்றியும் இல்லை!
பயனும் அதனால் ஆகாது எல்லை!
சிந்திய மழைத்துளியை திருப்பிட முடியாதது!
சிதறிட்ட எண்ண அலையை கோர்த்திட முடியாது!



## சுற்றம் காணும் சுகந்தம்!

சுற்றி வரும் உலகில் இப்போ!
சுற்றத்தை காண வந்திடும் சுகந்தம்!
சுமந்து நின்கின்ற வேலையை மறப்போமே!
சுற்றி அவர்களுடன் கதைத்து மகிழ்வோமே!

பாச உணர்வு பற்றியே நின்றிடுமே!
பார்த்து மகிழ புகைப்படம் போலாகுமே!
சுற்றியுள்ள சூழலும் செழிப்பாய் மாறிடுமே!
எமக்கு உள்ளும் ஓர் ஒளியாய் பிரகாசித்திடமே!

நண்பர்கள் அயலவர்கள் எம்முடனே இணைந்திட்டாலே!
நன்திசைகளிலும் இதயத்தில் மகிழ்வுதானே!
அழியாத நினைவுகளாய் மனதிலே பதியுமே!
மகிழ்வான அந்த நிமிடங்களை அழியாமல் காப்போமே!

## மாற்றங்கள்!

வாழ்வின் பகுதி இது! மாற்றங்கள்!
வரலாறுகள் கூறினாலும்
மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு!
வயதில் மாற்றம்!

வடிக்கின்ற கவிதையிலும் மாற்றம்!
பாடசாலையிலும் மாற்றம்!
படிக்கின்ற பாடங்களிலும் மாற்றம்!
வருடத்தில் நான்குமுறை ஏற்படுவது மாற்றம்!

சூழ்ந்திருக்கும் சுற்றுச் சூழலின் மாற்றம்!
பூக்களின் நிறமும் மாறும்!
பாக்களின் வரியும் மாறும்!
சிந்தனையிலும் மாற்றங்கள்!

விந்தைகளும் அதனால் புலப்படும்!

## வரையாத கோலங்கள்

வரையாத கோலங்கள்!
மௌத்தின் உறவுகள்!
தோன்றுகின்ற எண்ணங்கள்!
வரைகின்ற கோலங்கள்!

வடிக்கின்ற வரிகளிது!
பேசுகின்ற கோலங்கள்!
மனதை பேச வைக்கும் கோலங்கள்!
வானிலே பறக்கும்!

பறக்கின்ற கோலங்கள்!
தண்ணீர் கோலமிது!
வரையாத கோலமிது!
நீரோட்டத்தை நிறுத்துகின்ற பாதையிது!

## சித்திரை நிலவே!

சித்திரை மாதம் தோன்றும் நிலவே!
சிற்சில நிமிடத்துள் மறைந்துதான் போவாயோ?
சித்திரை மாத சிறப்பு நிலாவே!
சித்திரமாய் பல புதுமைகளும் செய்வாயோ?

சின்னச் சின்ன நம்பிக்கை வைப்பர் உன் மேலே!
நித்திரை விழித்துக் கூட உன்னைப் பார்ப்பர்!
சித்திரை நிலவுதனிலே சிறப்பாய் மிளிரட்டும் புது ஆண்டு!

## கற்றதும் பெற்றதும்!

கணக்கில் கற்றதை!
கடையில் பாவித்திட!
கற்றதை மீண்டும்
மீட்டிப் பார்த்திட!
பெற்றேன் அனுபவம் சில!
கற்றதை பாவித்திட!
சரியான விடையை!
பெற்றிட்டேன் நானே!

பலவற்றை கற்றிட்டு
அறிவுகள் பெற்றிட!
முயற்சி செய்கின்றோம்!
தினம் தினமாய்!

## தேடியது மனது...

நிலத்தின் மீது துளிகள் விழ!
வனத்தின் மீது வாழ்வு செழிக்க!
சுருங்கிய முகமும் சுடராய் விரிய!
நெருங்கிய உள்ளமும் நேசத்தை தேடியது!

வனப்பாய் மரமும் வானத்தை தொட!
தேடியது மனது வாழ்க்கையின் உயர்வை!
மகிழ்வாய் பேசின கிளிகள் மரத்தில்
தேடியது மனது வளர்ச்சிப் பாதையை!


துன்பத்திலிருந்து விடுபட தேடிய மனது
ஓர் விடையை
கண்டது இயற்கையில் ஓர் நிகழ்வை
பதிலையை தேடி நின்றது மனது

கொடிகள் எல்லாம் மேலே படரும்
வேர்கள் மட்டும் கீழே போகுது
இவை வேதனை கொள்வதும் உண்டா?
இல்லை வெளியே சொல்வதும் உண்டா?

## வாழும் வரை போராடு!

வாழும் வரை போராடு!
வாழ்வு உனக்கென முனைந்திடு!
வெற்றி உனக்கென நினைத்திடு!
நம்பிக்கை என்பதை பதித்திடு!
இலக்கை நோக்கி விரைந்திடு!

இலட்சியங்கள் பலவாய் நிறைவேற்றிடு!
செய்யும் செயலில் மகிழ்ச்சி கொண்டிடு!
செழிப்பாய் நீயும் வாழ்த்திடு!
கவிதை முன்னுரை எழுதிட்டேன்!
கணக்கின்றி தமிழையும் வரித்திட்டேன்!



## அகமகிழ வைத்த தமிழே!

அழகே! தமிழே!
உன்னை ஆராதிக்கிறேன்!
அன்னை மொழியிலே உயர நினைக்கிறேன்!
அதிலே தினமும் பேசிமகிழ்கிறேன்!

ஆண்டுகள் பலவாய் பங்கேற்ற தமிழத்திறன் போட்டியே!
வெற்றியும் எனக்கு அள்ளியும் தந்திட்டாய்!
All german போட்டியிலே கவிதையிலும் பேச்சிலும்
முதல் இடங்களை வென்றிட வைத்திட்டாய்!

இனிய தமிழே இன்ப ஊற்றாய் என்னுள் எழுகிறாய்!
இதமாக போட்டிகளிலும் வெற்றியை
ஈட்டித் தருகிறாய்!
அகமகிழ வைத்த தமிழே!
என்றும் உன்னை ஆராத்திக்கிறேன்!

## அப்பா

அமைதியும் பண்பும் அவரிலுண்டு!
அன்போடு பழகுவார் என்னோடு!
அவசியமானதை வேண்டித்தருவார்!
அறிவுரையும் கூறி நல்வழிப்படுத்துவார்!

## அம்மா

கருவிலே எம்மைத் தாங்கி!
கருத்துக்களை உரைப்பவள்!
காலம் எல்லாம் எமக்காக!
தன் வாழ்வெல்லாம் கரைப்பவள்!

## அண்ணா

அண்ணா தங்கை உறவது!
அருமையான உறவிது!
அன்போடு பழகிடுவார்!
உதவியும் தந்திடுவார்!

## நட்பு

பிரியாத உறவாய்!
பிணைந்த நல் உறவாய்!
அன்பின் வெளிப்பாடாய்!
அவசியம் இது வேண்டும்!

## எங்கே நிம்மதி?

சுற்றும் உலகம் உன்னைச் சுற்றி!
சுழலும் பூமிக்கு நிம்மதி எப்போ ?
வேகமாய் பறந்திடும் உலகில் இப்போ
நிம்மதியை தேடி விரைந்திடும் யுகமிது!
வாரத்தில் ஐந்து நாளும்!
நிம்மதியை தேடி நாடிடுமே மனது!
வாரத்தின் விடுமுறையும்
வா வா என்று அழைத்திடுமே!
வெளியில் சென்று விளையாடி மகிழ்ந்து!
வெட்ட வெளியே பறந்து திரிந்து!
அமைதியாய் நாம் இருக்க
நாளது போதாதே!
எங்கே நிம்மதி ? எதிலே நிம்மதி ?
நித்தமும் நிம்மதியை தேடிடும் யுகமிது!

## குத்துவிளக்கு !

குத்திடும் விளக்கு அதுவே!
குன்றிடாத குத்து விளக்கே!
ஐந்திசையும் ஒளி பரப்புவாயே!
ஐந்து முகம் கொண்டாயே!
இருளிலே ஒளி ஏற்றிடுவாய்!

இல்லகத்தை மிளிர வைத்திடுவாய்!
அருள் ஒளி தருவாய்!
ஆனந்த மகிழ்வும் தருவாய்!
இறை நம்பிக்கையை ஊட்டிடுவாய்!
தீப்பந்தமாய் ஒளிர்ந்திடுவாய்!




## காதலர் தினமே!

காதலிக்கும் மக்களை கவருகின்ற தினமே!
காதலர் தினமாய் பூக்கின்றாய்!
காதலின் வெளிபாட்டை உணரவைப்பாயே!
காதலிப்பவர்களை மகிழ்வு படுத்துவாயே!
வருடத்தில் ஒரு முறையாய்!
மனங்களில் பல முறையாய்!
ரோசாப் பூவைக் கொடுத்து!
மகிழ வைப்பாயே!
வாழ்த்துக்கள் கூறி அன்பை வழங்கிடும்!
வாஞ்சையாய் இனிதே மலர்ந்தாயே!

## வருடம் தோறும் வரும் வசந்தகாலமே

வாட்டும் குளிருக்கு அடுத்ததாய் வருவாயே!
வரண்டு போன மரங்களுக்கு
வர்ணத்தை கொடுப்பாயே! – உன்
வரவைக் கண்டு மகிழ்கின்றோம் நாம்!
வருடம் தோறும் வந்து வசந்தத்தை தருவாயே!
வசந்தகாலம் என்ற பெயரைப் பெற்றாயே!



## நீ இல்லாத நேரம்!

அணுவும் அசையாது!
கணுவும் தெரியாது!
காற்றே நீ வீசினால்!
ஊற்றாய் வருமே கவிதை!

கன்னித் தமிழோடு!
எண்ணி என் சிந்தனை!
விண்ணைத் தொட்டு விரையுதே!
நீ இல்லாத நேரம்!

உன் அருமையும் புரியுதே!
விட்டுப் பிரியாத உறவாய்!
எட்டுத் திசையும் ஒலித்தாயே!
ஆறு வயதில் அடிபதித்தேனே!

ஆண்டுகள் பலவாய் உருண்டோடினவே!
நீ இல்லாத நேரம்!
இன்பத் தமிழும் ஒலிக்காமல் ஓயும்!

## கல்லறைகள் மீண்டுமாய் கருத்தரிக்கின்றன

ஈழத்தின் விடியல் அது விதையாகுது
தேசத்தின் விதையல் இங்கு கொழுந்தாகுது
மாவீரர் கனவாக கருவானது
போர்வீரர் நினைவாக உருவானது

கல்லறையின் படிமங்கள் கதைத்தபோது
உள்ளறையின் உதயங்கள் உருவாகுது
போர்வீரர் புதைந்தாலும் புலிவீரரே
மாவீரர் மறைந்தாலும் மண்வீரரே

மன எண்ணத்தின் கருவோடு சிதைவானது
மறுபடியும் விரைவாக அரங்கேறுமே
உள்ளத்தின் புதையல் அது உருக்குலையுமா?
உணர்வுகளின் சிதறல் அது சிதைவாகுமா?

கருவோடு விதையாகி சுமந்தவர்கள்
கனவோடு கதிராகி எழுந்தவர்கள்
கனவோடு கலையாமல் கருவாக்கி தருவார்கள்
மாவீரர் மூச்செல்லாம் ஈழத்தில் தான்

இலவு காத்த கிளி போல் இருந்தார்கள்
இரை மீட்டித் தருவார்கள் ஈழத்தை தான்
கல்லறையில் காத்திருக்கும் கரும் பூக்கள்
கல்லறையில் காத்திருக்கும் கரும் பூக்கள்

## தண்ணீர் !

71% பூமியிலே இதன் பங்கு!
உயிரினங்கள் வாழ்வதற்கு இதவுமோர் காரணியே!
அதனால் தான் நீலக்கோள் என்றும்
நம் பூமியை அழைப்பாரோ.
அருகி வருகிறதாம் நீர்வளம் இன்று!
உலக விஞ்ஞானிகளின் கருத்து இது!
தண்ணீர் மகாநாட்டிற்காய் கூடுகிறார்கள் இப்போ!
தண்ணீரைச் சேமிக்க வழியொன்றை தேடுவதற்காய்!

இயற்கையை இருந்தபடி விட்டுவிட்டால்!
வழியொன்று இதற்கு இனி தேவையில்லை!
இந்நூற்றாண்டின் நீர் இது பொன்னே!
கிடைத்திடுமோ இது பல காலம் பின்னே!

## பம்பரம் !

பம்பரம் போலே நாமும் சுடிலுவோமே!
நம்பிக்கை எமக்கு உறுதுணை தந்தாயே!
காற்றும் கடுமையாய் வீசினாலே!
சுழன்றிடுமே பம்பரம் தன் சுழற்சியிலே வேகமாக!

வர்ண நிறங்களில் பல்லாயிரம் பம்பரங்கள்!
பல்லாயிரம் வடிவங்களில் மனிதனின் உணர்ச்சிகள்!
ஆனால் அனைத்திலும் ஒன்று!
அதன் சுழற்சி தானே!

சிறிய வயதிலே விளையாடுவோமே பம்பரத்தை!
சுழற்றத் தெரியாமல் பெரியவரை கேட்போமே!
சுழற்றத் தெரிந்தாலே மகிழ்சியும் அதிகமே!
வாழ்வில் தொடரும் பாதையும் தெரியுமே!

## சோக மாதம் மரங்களே!

சோகமாகும் மரங்களே!
சொல்லும் செய்தி என்னவோ?
பாதியான இலைகளும்
பழுத்து கீழே விழுந்தன
சிவப்பு, பச்சை, மஞ்சளென
சிரிக்க உன் இலைகள் எல்லாம்
சிதறி இப்போ போனதேன்?
இலை உதிர்காலம் வந்ததால்
சிதறி இலைகள் போனதுவோ?

## தீர்மானம்!

வாழ்வில் வந்திடும் தீர்மானங்கள்!
வாழ்வை வளமாக்கும் வர்ணக்கோலங்களே!
தீர்கமாய் நாமும் சிந்தித்தே!
எடுத்திடுவோம் தீர்மானங்களை எமக்காகவே!

தினம் தினம் 100000 தீர்மானங்கள்!
வினாடிக்கணக்கிலே மூளையை கூறுகிறதே!
எதிர்காலம் பற்றிய தீர்மானங்களே!
எடுக்க நம்மால் உடனே முடியாதே!

இரண்டு புறமாய் சிந்திக்க வேண்டுமே!
இரவு பகலாய் பிரச்சனை இருக்குமே!
நாளை நாளையென்று தள்ளிப் போட்டிடுவோமே!
தொல்லை இதனால் இன்னும் அதிகமே!

புதியதையும் சிலவேளைகள் செய்யத் துணிய வேண்டும்!
விரும்பியதையும் சிலவேளை கைவிட வேண்டுமே!
நேரத்தை அதிகம் கழிக்காமலே!
முடித்திடுவோம் வெற்றியாய் அதை முயன்று நாமும்!

## மறந்தது எப்படி?

முடியாத கனவுகளாய் தொடர்ந்திடும் வாழ்விலே!
முழுமையாய் நாமிருந்தும் பறக்குது காலம்!
முக்கிய காரியங்களை சேர்த்தே ஆற்றுகின்றோம்!
முக்கியமான கருமங்களை மறந்தும் விடுகிறோம்!

பாடசாலையில் பயின்றிட்ட வேற்றுமொழிகளை பின்னர் மறந்ததும் எப்படி?
பாராட்டுக்களையும் வெற்றிகளையும் சிலவேளைமறந்ததும் எப்படி?
பாசத்தின் உணர்வை சீற்றத்தில் மறப்பதும் எப்படி?
பழகிய தோழியை மீண்டும் காணும் போது மறந்ததும் எப்படி?

கவிதைத் தலைப்பை மறந்தது எப்படி?
கவிதையே தலைப்பாய் மாறியது எப்படி?
கணமொன்று சிந்திக்க வைத்தது எப்படி?
கவிதனைப் புனைந்திட முயன்றது எப்படி?

கற்பனைகள் தோன்றிடும் மூளையிலே!
கணப்பொழுதில் சிலதையது மறைப்பதுவுமுண்டு!
கட்டுக் கோப்பாய் தகவலை பதிந்து வைத்தாலும்!
கடினமாயது உறைபனிக்குள் சிக்குவதுவும் ஏனோ?
கடுகதியாய் அதுவும் செயலாற்ற தவறுவதுவும் எப்படி?



## கற்பனைகள் பலவிதமாய்...

கண்ணை மூடித் திறக்கும் முன்பே!
கண்ணீர்த்துளியும் உற்பத்தி ஆகிவிடுமே!
கடும் இருளுக்குள் நாமும் மூழ்கிவிடுவோமே!
கற்பனைகள் பலவிதமாய் உருண்டோடிடுமே!

அதிர்ச்சியான செய்தியாய் காதில் ஒலித்திடுமே!
அடுத்தது ஏதுவென்று அறிந்திட துடிப்போமே!
அந்த நிமிடத்தில் எழுந்திட்ட யோசனை!
அந்தக் கணமே மூடி மறைத்திடுமே!

முயற்சிக்கு எல்லைகள் இல்லை என்பார்!
இருந்தும் சிலவேளை வரம்புகளை மீறவும் இயலாதே!
ஏமாற்றம் மனதுக்குள் ஆழவே விதைந்திடும்!
எடுத்த காரியங்களும் ஒரு கணம் கைவிட்டுப் போய் விடுமே!

நினைவுகள் மட்டுமே எஞ்சிய பகுதிகளாய்!
சாதித்ததை ஒரு கணம் பார்த்து விட்டாலே!
வீணாகிப் போய்விடாது இந்த அனுபவமும்!
என்று கூறிடவும் வைத்திடுமே!

## பாதை மாறும் பயணம்!

பாதை மாறும் பயணம்!
பயிற்சி ஒன்று இல்லாத!
நீண்ட தூரப் பாதையிது!
பாதை மாறும் பயணம்!
முயற்சியுடனே வெல்லத் துடிக்குது!
வாழ்க்கைப் பாதையின் தொடரிது!
வல்லமையாய் வாழ்வை வெல்ல முனையுது!
பாதை மாறும் பயணமிது!
திருப்பங்கள் கொண்ட பயணமிது!
பாதையிது முன்னேற்ற பாதையிது!
இலட்சியத்தை கொண்ட பாதையிது!
இலக்கை நோக்கி விரையுது!
மாறும் பாதை பல கொண்ட பயணமாய்!
வாழ்வில் பாதை அமையுது!

## நவராத்திரி

ஒன்பது நாட்கள் தொடரும் ராத்திரி!
முத்தேவிகளை வழிபடும் ராத்திரி
கல்வி, செல்வம், வீரத்தை பெற்றிடும் ராத்திரி!
வாழ்க்கையில் இவை மூன்றும் நிலைத்திட வேண்டிடும் ராத்திரி!
மாணவர் இவர்க்கோர் நல்ல ராத்திரி
கல்வியை வேண்டி சரஸ்வதியை துதிக்கும் ராத்திரி!
பாடசாலையில் கொண்டாடிடுவோம் இந்த ராத்திரியை!
அவல், கடலை, சுண்டல் என்று கடவுளுக்கு படைத்திடும் ராத்திரி இது!

31 / ஷரீகா சிவநாதன்

## எனக்குள்ளும் மாற்றம்!


கடுகதி வாழ்வில் காலத்தின் மாற்றம்!
கடகட வென்று ஆண்டுகள் மாற்றம்!
கடிகார முள்ளும் தினசரி மாறும்! –அதுபோல்
இயற்கையில் நிகழும் அற்புத மாற்றம்!
இதற்குள் எனக்குள்ளும் மாற்றம்!
ஆண்டுகள் செல்ல அனுபவங்கள் கூட!
அறியும் ஆற்றல் வளர்ந்தது எனக்குள்!
கல்வியில் மாற்றம் கருத்தில் மாற்றம்!
சிந்தனையில் மாற்றம் செயற்பாட்டில் மாற்றம்!
ஆண்டுகள் பலவாய் தொடரும் மாற்றம்!
தொடரும் பாதையில் எனக்குள்ளும் மாற்றம்!

## கார் இருளே!

நேரத்தை மாற்றிட இருளும் வந்ததே!
கார்காலம் தொடங்கி இருளும் நீண்டதே!
நீண்ட நேரம் உறங்கிட விட்டாயே!
உறக்கத்திலிருந்து எழும்பிடவும் இருந்தாயே!
மிதிவண்டி ஓட்டிட ஒளியும் தேவைப்பட்டதே!
கடினமாய் மிதித்து மிதிவண்டியை ஓட்டிடவும் வைத்தாயே
இருளுக்குள் ஒளிதரும் ஒளிகளை கொண்டாயே!
பரந்து கிடக்கும் விண்மீன்களாய் அவை!

## நட்பு

வேரும் விழுதுமாய் பிணைந்த நல்நட்புகள்!
வேரூன்றிய காலம் தொடங்கியே!
வருடங்கள் பலவாய் தொடர்ந்திடுமே!
வட்டமாய் சேர்ந்தே கூடிப் பேசுவோமே!
இடைக்கிடையே சிற்சில சண்டைகள் புரிவோமே!
இருந்ததும் நட்புடன் இணைந்து கொள்வோமே!
ஒருவருக்கு ஒருவர் தேவை என்று சொல்வோமே!
ஓயாமல் தினம் தினம் பேசி மகிழ்வோமே!
பெருந் தோட்டத்தில் மலரும் அழகிய மலராய்!
ஒருவரை ஒருவர் கண்டுபிடித்தே!
இணைந்திட்டோம் அழகிய பூக்கொத்தாய்!
இதயத்தில் மகிழ்வு இதனால் இப்போ!



## மாவீரர் பாதங்களை அலங்கரித்த கார்த்திகைப் பூவே!

மாவீரர் நாளிலே வாங்கிய பூ!
மனதை கவர்ந்த கார்த்திகைப் பூ!
சிவப்பு மஞ்சள் நிறங்களைக் கொண்டாய்!
சிறந்து மலர்வாய் கார்த்திகை மாதத்திலே!
ஆறு இதழ்களை மெல்லவே விரிப்பாய்!
ஆறு திசைக்கும் ஒளியை ஊட்டுவாய்!
ஆறு புல்லிகளை அழகாய் கொண்டு!
ஆறு இதழுடன் அழகாய் இணைவாய்!
மாவீரர் பாதங்களை மகிழ்வுடன் அலங்கரிப்பாய்!
மனதும் உன்னைப் பார்த்து நம்பிக்கை கொள்ளுமே!
தேசியப் பூவாய் மலர்ந்த பூவே!
தேசத்தின் அமைதியை கொண்டு வருவாயே!

## சிந்தனைத்துளிகள்!

மின்னல் போல் வந்திடும்!
மிளிர்ந்திடும் சில நிமிடங்களில்!
பலதில் இது தேவைப்படும்!
பலரையும் இது கவர்ந்திடும்!
ஆழ்ந்த சிந்தனையின் வழியிது!
ஆண்டுகள் பலதின் வளர்ச்சியிது!
சிந்துகின்ற சிந்தனைத்துளி இது!
சிரிப்பையும் சிலதில் ஊட்டிடும் அடித்தளமிது!
விரிகின்ற கருத்தின்
விடை தேடுவதற்கான முயற்சியிது!

## மகிழ்வுதரும் மாதமே!

மகிழ்வுதரும் மாதமே சிறப்பான மார்கழியே!
வீதிகளில் விழாக்கோலம் பூண்டிடும் மார்கழியே!
வருடத்தின் இறுதியாய் மலர்ந்திடும் மார்கழியே!
ரோமர்களின் கணக்கிலே 10வது மாதம் ஆனாயோ?
என் பிறப்பையும் தாங்கியே வந்திடுவாயே!
நத்தார் பண்டிகை வந்திடும் மாதம் இது!
மகிழ்ச்சியாய் இந்த வருடத்தை பிரியா விடை கொடுக்கும் மாதம் இது!
புத்தாண்டை மகிழ்ச்சியுடன் வரவழைக்கும் மார்கழியே!
ஆண்டின் இறுதியாய் மலர்ந்திடும் மாதமே மார்கழியே!
ஆண்டின் நிகழ்வுகளை தாங்கியே மலர்வாய் நீயே!
இறுதி மாதமாய் உறுதிகொண்ட மாதமாய்
சிறப்புடன் மலர்வாய் மார்கழியே!

## பச்சை!

இயற்கையின் நிறம் இது!
இரகசியம் ஒன்றை கூறுது!
பார்க்கும் இடமெல்லாம் பச்சையாய் கிடக்குது!
பாரில் பச்சை நிலைத்திட வேண்டுமே!
செடி,கொடி மரமெல்லாம் பச்சையே!
அமைதியின் நிறமாய் உயர்ந்திட வேண்டுமே!
சமிக்கை விளக்கின் பச்சை நிறமது!
வாகனங்களை ஓட வைத்திடுமே!
வானவில்லின் நடுவே பச்சையே ஒளித்தது!
வண்ணப்பட்டாடையும் பச்சாய் இருந்தது!
எண்ணிய நினைவுகளும் பச்சையாய் மனதிலே!
எழுதும் பேனாவும் பச்சையாய் கிடக்குது!

## போகும் பாதை சரிதானா?

24 மணி நேரச் சேவையாய்!
இயங்கும் லண்டன் ரைமே!
வானலையில் தடம்பதிக்கும்!
வைரமித வானொலியே

அகவை நான்கினிலே!
அடி பதிக்கின்றாயே!
அயராத சேவைக்கு!
வாழ்த்துக்கள் பல!

நித்தமாய் மலர்ந்திடும்!
நிகழ்வுகள் பலவாய்!
பலரை கவர்ந்திட்டாய்!
பல துறையில் வளர்த்திட்டாய்!

போதம் பாதை சரிதானா?
இளையோர் பலரை
தமிழோடு இணைத்திட்டாய்!
செந்தமிழோடு செழிப்பாய் மலர்ந்திட்டாய்!
மலர வைத்திட்டாய்!
போகும் பாதை சரியென்றே!
சொல்லத்துடிக்கது மனமும் இப்போ!

## தாய்மொழி

முதலிற் பயிலும் மொழியிது!
முதலே அறிந்த மொழியிது!
தாய்மொழி என்று நாவிலே தவளும்!
நற்றமிழ் மொழியிது!

சிந்தனைமொழியாய் கல்விமொழி இப்போ!
சிறந்திட உலகில் தாய்மொழி தேவையோ?
தேவை என்றால் பதில் உண்டு!
சிந்தனை மொழியே தாய்மொழி என்கிறார்கள்!
வளரும் இச்சிறார்கள்!

தவறென்றே நெஞ்சினில் படுகிறது!
தாய்மொழி தமிழேதான்!
தவிர்க்க யார் வருவார்?

## காலக்கெடு

காலத்துக்கு இல்லை!
காலக்கேட்டை நாம்தான் விதிக்கிறோம்!
இயற்கையின் தலைமையிலே நடக்கிறது சில நிகழ்வுகள்!
இருந்த போதிலும் துளிர்க்கிறது இன்பம்!

இப் பூவுலகுக்கும் ஓர் காலக்கெடு உண்டு!
சூரியனை அது சுற்றி வருவதற்காய்!
இரவு பகலாய் சுழல்கிறது!
இலையுதிர்காலமும் இலை துளிர்காலமும் வருகிறது!

பாடசாலையை மாறுகின்றோம் நான்கு வருடங்கள் பின்பாய்?
பன்னிரண்டு ஆண்டுகள் முடிந்ததும் விடைபெற்றுச் செல்கிறோமே!
கவிதையை அனுப்புவதற்கு ஓர் காலக்கெடு!
காத்திருப்பு அடுத்த தலைப்பிற்காய்!
எத்தனை காலக்கேடு இருக்குது வாழ்வில்!
இத்தனை மட்டும்தான் இதயத்தில் பதிகிறது!
சற்று அதை சிந்தித்தால்!
அதன் அர்த்தம் அங்கு புரிகிறது!

## மனதைத் திற!

பரந்த வானத்தை எட்டிப் பார்!
பந்தல்கள் போல் தூங்கும் முகில்களைப் பார்!
பக்கத்தில் இருக்கும் பூந்தோட்டத்தைப் பார்!
பலவிதமாக உள்ள பூக்களைப் பார்!
பந்தமும் பாசமும் தொடர்வதைப் பார்!
பூக்களைப் பார் அதில் உள்ள மொட்டைப் பார்!
மொட்டுக்கள் உனக்குள்ளே மலர்வதைப் பார்!
மெட்டுக்கள் உனக்குள்ளே எழுவதைப் பார்!
உன் மனதை அவ்வானத்தைப் போல் திறந்து பார்!
மூடிக்கிடந்த கதவை திறந்தால்!
உன் திறமையும், இலட்சியமும் உனக்குப்புரியும்!

## ஆடியின் அறுவடை!

ஆடி மாதமும் மலர்ந்திட்டதே!
ஆடிப்பாட ஓர் சந்தர்ப்பமே!
கதிரவனும் சிரித்து மகிழ்வானே!
கடும் மழையும் பொழியுமே!

விடுமுறையும் இங்கே ஆரம்பித்ததே!
விளையாட துடித்திடுமே மனமும்!
விளையாட்டுப்போட்டியும் வந்திடுமே!
விளையாடி வெற்றியும் சேர்ந்திடுமே!

எம்மவர் நிகழ்வுகளும் பூத்திடுமே!
எம்மையும் சேர்த்தே இணைத்திடுமே!
மணிக்கணக்காய் மகிழ்வை ஊட்டிடுமே!
பொன்மாலை பொழுதுகளையும் துளிர்த்திடுமே!

ஆடியின் அறுவடை இப்போ!
அழைக்கிறதே எம்மை சிந்திப்பதற்காகவே!
மாதமும் இன்னும் முடியவில்லை!
மறக்க முடியாத அறுவடையும் கிடைக்கலாமே!

## மே மாதம் அதனிலே...

மாதங்களில் உயர் வெப்பமாய்!
மே மாதம் வரலாறு படைக்கிறதே!
பதிவுகளில் பதியப் படாத உயர்வாய்!
பாரினில் மே மாதம் மலர்ந்து நிற்கிறதே!
பூக்களும் மகிழ்வாய் விரிகிறதே!
பொழுதுகளும் நன்றாய் புலர்கிறதே!
பகலும் நன்றாய் கூடுகிறதே!
இரவும் இனிதாய் குறைகிறதே!
மாணவர்கள் விளையாட விரும்புகிறார்களே!
மகிழ்வாய் பொழுதும் கழிகிறதே!
பாடங்களும் வெளியே நடக்கிறது!
பசுமையும் வெளியே தெரிகிறதே!

## மகிழ்ச்சி

நல்ல விடயங்கள் செய்திட மகிழ்ச்சி!
நண்பர்களோடு பழகிட மகிழ்ச்சி!
பாராட்டு அனைவரிடம் கிடைத்திட மகிழ்ச்சி!
பண்புடன் அனைவருடனும் பழகிட மகிழ்ச்சி!
சிறந்த புள்ளிகள் பெற்றிட மகிழ்ச்சி!
விளையாடும் போது பிறந்திடும் மகிழ்ச்சி!
விரும்பிய நாடு வென்றால் மகிழ்ச்சி!
சிதைந்த கனவுகள் நனவானால் மகிழ்ச்சி!
நினைத்தது எல்லாம் நடந்தால் மகிழ்ச்சி!

## சக்கரங்கள்

கரங்கள் போலே எமக்குதவியாய்!
சுழலுகின்ற வட்டங்களாய் சக்கரங்கள்!
வருடக்கணக்காய் உருளவைக்கும் சக்கரங்களாய்!
உதிக்குது அதுவும் புதிதுபுதிதாய்!

வாழ்க்கை எனும் சக்கரமாய்!
சிந்தனைக்கடலிலே தினமும் நீந்தவைக்குது!
இழப்பிலும் மகிழ்விலும் ஒன்றாயிருக்கிறது!
மீண்டும் மீண்டுமாய் முன்னேறவைக்குது!

வாழ்வு என்பதொரு சக்கரமாக!
எமக்குள்ளும் ஒவ்வொரு சக்கரங்கள்!
தினமும் எம்மை இயங்கவைப்பதால்!
தேசியக்கொடிகளிலும் இடங்கள் பெற்றதுவா?

வருடமும் இங்கு சக்கரமாகும்!
எண்ணங்கள் மட்டும் புதிதாய் மாறுது!
மொத்தத்தில் நாமும் சக்கரமாகிறோம்!
எம் வாழ்விலிங்கு வெற்றியைக்காண!

## கடலின் அளவிலே!

கடலின் அளவிலே மனம் இருக்கும்
அதில் கவலையும் மகிழ்வும் வந்து போகும்
கடலின் அழத்திலே அறிவிருக்கும்
அதைக் கண்டுபிடிப்பதிலே வாழ்விருக்கும்
கடலின் ஓடத்திலே முயற்சியிருக்கும்!
அதை வென்று காட்டுவதிலே
உன் இலக்கிருக்கும்!
அலை மோதிடும்போது பரீட்சையிருக்கும்!
அதில் தேர்ச்சி அடைவதிலே
உன் எண்ணம் இருக்கும்!

## புத்தகமே!

படித்து மகிழும் புத்தகமே!
பாடம் நமக்குத் தருகிறாய்!
அறிவை நாளும் வளர்க்கிறாய்!
கதைகள் கொண்டு விரிகிறாய்!
கனிவான இதயத்தை நிறைக்கிறாய்!
எண்ணம் பலவும் வளர்க்கிறாய்!
எழுத நீயும் தூண்டுகிறாய்!

## உந்துதல்

கண்மூடித்திறக்கும் கணம் கூட
ஒரு மணித்துளியாய் துளிர்கிறதே!
சோலைகளை கடந்து செல்கையில்
மகிழ்ச்சியும் எம் வாழ்வில் ------
இது போல பூத்திடுமோ என்கிறோமே?

பாலத்தில் நின்று கீழே பார்க்கையில்
நதிபோல் ஓடிய நிழல்களை பார்க்கையில்
இரு பக்க முனைகளும்
ஒன்றாய் இணையும் நிலையுண்டு

பார்வை வேறு திசைநோக்கி
மகிழ்ச்சியை தேடி அலைபவரும் உண்டு
புன்னகைகள் சிறிதாக இருப்பினுமிங்கு
பெரியதைத்தேடி அலைகிறோம் ஏனோ?

இலட்சியங்கள் முன்னே இருக்கையிலும்
காலமும் கனிய இடமிருப்பினும்
சிறிய இழப்பதைக் கண்டு
ஏமாற்றம் என்று சோர்வதுமேனோ?

பின்னின்று உந்துதல் பெற்றிடவே
இழப்பதுக்கு என்னவுண்டென்று
சிந்திப்பதுவுமேனோ?
முதற்பதியம் இன்று பதிக்கையிலும்
இழந்ததை எண்ணி கரைவதுவுமேனோ?

## வீணாகிப் போகுமோ?

வீணாகிப் போகுமோ?
வைத்திட்ட படிக்கற்கள்
இலட்சியத்திற்காய் உழைத்திட்ட
மணித்துளிகள்

எண்ணிப் பார்க்க
எம்மால் முடியுமா?
எம்மனதின் துடிப்பது
யாருக்கு புரியும்?

எதிர்கால விருட்சத்திற்காய்
செல்கின்ற வழியிது
எம்மை இழந்தாலும்
போராடும் வாழ்க்கை களமிது

பலரின் கனவதுவும்
எம்மேல் உறங்குகையில்
வந்திடும் ஏமாற்றத்தை
தாங்கிட முடியுமா?

கடினமாய் உழைத்தது
வீணாகிப் போய் விடாது
வெற்றிக் கதவையது
தாண்டிச் செல்லு முன்

நம்பிக்கைக் காற்று எம் பக்கம்
வீசும் நாளை
எண்ணியே இறங்கிடுவோம்
எம் இலட்சியப் பாதையிலே!

## மௌனம்

ஆரவாரத்தின் எதிர்ப்பதம் இது ஆதனால்
ஆசிரியருக்கு இது பிடித்திடும்

கேள்வி ஒன்றை அவர் கேட்டால்
மௌனம் அது நிலைத்திருக்கும்

கோபம் அவர் முகத்தில் மிளிர்ந்திருக்கும்
சிந்தனை ஒன்று மிளிர்கையில்

மௌனத்தை விடுத்திருப்போம்
பலவற்றை மறந்திடுவோம்

படுக்கைக்குச் செல்ல முன்
மௌனத்தைத் தேடுவோம்

இயற்கையை இரசித்திடுவோம்
இரகசியங்கள் பகிர்ந்திடுவோம்

## பதிந்திடும் சுவடுகள்

பதிந்திடும் சுவடுகள்
பதிக்கின்ற வரலாறுகள்
புதிதாய் தோன்றினாலும்
துணிந்தேயதை பதியுங்களேன் !

நகர்கின்ற சுவடுகளும்
அடுத்ததை ஒட்டிய படிக்கற்களே!
நம்பிக்கையிங்கு கொண்டாலே
அனுபவத்தை யிங்கு சேர்க்கலாமே!

முடிபுகளும் தெரியாமல் இருக்கையிலும்
இலக்குகள் தெரிகையிலும்
பதித்திடும் சுவடுகளே
படைத்திடும் வெற்றிகளே!



## துபாய் நகர அழகினிலே!

மணித்துளிகள் சிலதும் பறந்துசென்றனவே!
துபாய் நகரத்தின் அழகை கண்டுரசிக்கையிலே!
எங்கும் பார்கையிலே அதியுயர்கட்டிடங்களே!
கதிரவனொளிதனிலே அளித்ததுவோர் அற்புதக்காட்சி!

துபாயின் இதயத்தை அணுகவே!
துபாய் கோபுரமும் தெரிந்ததே!
செய்தியில் வாசித்தது நினைவுக்கு வரவே!
உயரத்தைப்பார்த்தே வியந்து நிற்றோம்!

800 மீற்றர்கள் 15 நிமிடத்தில் வேகமாய் இழுத்துச்செல்ல!
நீச்சல்கூடங்கள், விடுதிகளென தாண்டிச்சென்று!
உச்சியை நாமும் தொட்டிட்டோமே!
கீழே பார்க்கையிலே உயரத்தையும் உணர்கையிலே!

நடந்து செல்கையிலே விண்ணிலே நடப்பதுபோல்!
ஒரு அற்புத உணர்வும் வந்ததுவே!
160வது மாடியில் நின்றே கோப்பியொன்றும் குடிக்கையிலே!
எட்டியே கீழே கண்ணாடியால் பார்த்திடவே!
மக்களும் காலைப்பொழுதினிலே அவசரமாய் ஓடிச்செல்கையில்!

நாம் மட்டும் இவ்வுயரத்தில் நின்று மகிழ்ச்சிகாணவே!
வாழ்க்கையின் சவால்களோ விரிந்துகிடக்கையில்!
எம் இலட்சியத்தை நாமும் அடைகையிலே!
இப்படியொரு வெற்றியின் களிப்பு !
கிடைத்திடுமே நம் வாழ்வினிலே!

## இதழாக...!

இதழ் இதழாக பூத்திடும் மலர்தன்னில்!
வைத்திடுவோம் நாம் ஒரு அவாதன்னை!
நிறைவேற்றியே அதுவும் வைத்திடுகையிலே!
இரசித்திடுவோம் அதன் வாழ்நாளின் அழகினையே!

பூவாய் நாமும் மலர்கையிலே!
வைத்திடுவார் பலரும் தம் எதிர்பார்ப்புகளை!
உயர்ந்திடும் போதினிலே இலைபோலே இருப்பார்!
விழுந்திடும் போதினில் நிழலிலும் நிற்கார்!

சிலர் இலைபோலே கூடியே இருப்பார்!
தன் நீரையும் எமக்காகக் கொடுப்பார்!
கிடைத்திடும் எண்ணத்துக்கு துணையாய் நிற்பர்!
நிகழ்ந்து முடிகையிலும் பின்னுக்கு நிற்பர்!

படிப்படியான வெற்றியிலும் வந்திடும் தோல்வியிலும்!
கதிரவனின் ஒளி குறைவெனினும்!
ஒன்றாய் சேர்ந்ததில் கிடைத்த மகிழ்வென்றே சிரிப்பாரே!
அதில் பிறக்கிறதே ஓர் உற்சாகம்!

## வீழ்ந்தே எழுவதால் வெற்றி நிச்சயம்!

சிறு ஒளியிருப்பினும்!
ஒளிர்வது நம்பிக்கை!
ஒலியாயிங்கு ஒலிக்குது!
இலண்டன் தமிழ் வானொலியும்!

எழுத்தின் வேரில்
எழுந்திட்ட கோபுரமாய்!
பதியம் பதின்மூன்றில்!
காலது பதிக்குது!

கனாவொன்று காண்கையில்!
உள்ளாழத்திலிருந்தது மலர்கையிலும்!
முழுமூச்சினோடதில் இணைகையிலும்!
நம்பிக்கையின் ஆழத்தை தொடுகையிலும்!

செல்கின்ற அவ்வழியினிலே!
தடைகளில் சிக்குண்டாலும்!
நிலத்தை முத்தமிடுகையிலும்!
வேறுவழியில்லையென தோன்றுகையிலும்!

கைகொடுப்பார் பின்னே!
துணைபோல் நிற்பாரே!
நாளையது நடக்குமென்று!
அவரும் கூறுவாரே!

அதைச் சொல்லும்போதே!
பிறக்குது உணர்சி!
மாறுதே மகிழ்சியாயதுவும்!
புது முயற்சியாயிங்கு!

திரும்பிப் பார்த்தாலும்!
திருப்பப் பார்த்தாலும்!
வீழ்ந்தே எழுவதால்!
வெற்றி நிட்சயமே!

## விளைச்சல்!

உருளும் உலகிலே விளையாட்டுமோர் விளைச்சல்!
விரைவாக சுழல்கையிலும் மகிழ்வதோர் விளைச்சல்!
நினைத்தது நடக்கையிலும் மனதிலோர் விளைச்சல்!
நினைவுகளில் மிதக்கையில் அதுவுமோர் விளைச்சல்!

அடுத்ததை நோக்கி நகர்கையிலோர் விளைச்சல்!
சிந்தனை செயலாய் மாறுகையிலோர் விளைச்சல்!
குடும்பமாயொரு குழுமமாய் இருப்பதிலோர் விளைச்சல்!
பின்னின்று ஊக்கம் கொடுப்பதாலோர் விளைச்சல்!

பெற்றோரின் ஊக்கத்திலே வருவதோர் விளைச்சல்!
நண்பர்கள் ஒன்றி இணைகையிலோர் விளைச்சல்!
இலக்கை அடைகையில் இன்னோர் விளைச்சல்!
பெற்றவரை மகிழ வைப்பதிலோர் விளைச்சல்!

பயிருக்கு விளைச்சல் முக்கியம் போலே!
வாழ்வினில் வந்திடும் விளைச்சல்களும் அதுபோன்றே!
அலையாது மனதிலே நிறைபவை தானே!
நிறைவான வாழ்வுக்கவை உறுதுணை தானே!

## ஆஸ்திரேலியப் பயணத்திலே!

கப்பலில் ஏறிய போது!
பயணமும் மெல்ல ஆரம்பமாகியதே!
நீரின் வீச்சினோடு இழுத்துச்செல்ல!
முன்னே நின்று வேடிக்கைபார்க்க!

சிட்னியின் இதயத்தை நேரேபார்க்க!
தொலைவிலிருந்து அருகே செல்ல!
Harbour Bridge அசர்ந்து பார்க்க!
நெருக்கியருகே நிற்பதை மறந்துபோக!

காற்றுமெல்ல வருடிச் சென்றதே!
Opera House முன்னே நிற்க!
அதன் கூரையின் அழகை
சற்று வியந்தே பார்க்க!

அன்று படங்களில் பார்த்தது!
நினைவுக்கும் இப்போ கிட்டியதே!
சிட்னி கோபுரம் ஊடே!
விண்ணிலே நாமும் நடந்துசென்றோம்!

உயரத்தில் நின்றதை பார்க்க!
இன்னோரு யுகத்துக்குள் நுழைத்தததுபோல!
எமக்குள் ஓர் உணர்வு!
இருந்தும் மகிழ்வாயமைந்தது அதுவும்!

உறவுகளோடு உறவாடி மகிழ்கையில்
படங்களும் நினைவாய் எடுத்துச்செல்கையில்!
சிரித்துப் பேசிய மணித்துளிகளுமிங்கு!
பதிவாய் இங்கு ஆனதும் இன்று!

## புதுவொளி!

புதுவொளி வீச புத்துயிர் பெற்றிட!
கனவுகள் நனவாய் ஆகிட காத்திட!
சிந்தனையின் ஓட்டத்தில் நாமுமதை விட்டிட!
அடுத்ததாய் நடப்பதை யார் அறிவார்?

ஒன்றின்பின் ஒன்றாக நிகழ்ந்து முடிந்திட!
பாரிய வடுக்களை விட்டும் சென்றிட!
உலகம் கவிழும் அந் நிமிடம்!
இதை நாம் எதிர்பார்த்தோமா?

எதிர்பாராமல் நடக்கும் விடயங்கள் பற்பல!
எம் கையிலில்லா விடயங்களும் நடப்பதுண்டே!
அவை பாரிய மாற்றங்களையும் உருவாக்குமே!
அம்மாற்றங்களோடு இணைந்தே வாழ்வதே வாழ்க்கை!

நினைத்ததின் வழியே அனைத்தும் நடப்பதுமில்லை!
நடந்தவை எல்லாம் நிலைப்பதும் இல்லை!
மாற்றங்கள் ஏமாற்றங்கள் இல்லா வாழ்வதுமுண்டோ?
தோல்வியுறாமல் ஒரே வெற்றியை காண்பதுமுண்டோ?

நம்பிக்கையொளி இங்கு இனி வீசாதோ?
கனவுகளை நனவாக்க புதுவொளி ஒளிராதோ?
வீழ்ச்சியொன்றினால் ஆட்டம் கண்டாலும்!
புயற்காற்றாய் மாறியிங்கு உச்சியை தொட்டிடலாமே!

## சக்திகொடு !

தடுக்கி நாமும் விழுந்திட்டாலும்!
உலகமே எமக்கெதிராய் தோன்றினாலும்!
முடிவில் இருக்கப் போவதுதான் என்ன?
முன்னேற்பாடாய் எதையும் செய்யாதபோதினிலும்!

எம்மால் நாமும் ஏமாறுவதுமுண்டு!
எதிர்பாராமலே நடந்திடும் நிகழ்வுகளுமுண்டு!
ஒன்று நம்மை விழவும்வைக்கும்!
இன்னொன்று நம்மை மகிழவும்வைக்கும்!

நிமிர்ந்து நாமும் சென்றிடும்போதும்!
கனவுகள் நமக்குள் பிறந்திடும்போதும்!
நினைவுகள் நம்மோடு நடந்திடும்போதும்!
சக்தி ஒன்று கிடைக்கிறதே!

தோல்விகள் நம்மை கட்டியணைத்தாலும்!
வழிகளும் நமக்கு தென்படாதுபோகில்!
சக்திகொடு இறைவா அப்போது!
நிச்சயம் அன்றே வழியொன்று பிறந்திடுமே!

## முதன் முதலாய்...

முதன் முதலாய் கால் பதிக்கையிலே!
முதன் முதலாய் தனிமையிலே!
முதன் முதலாய் தன் கால்களிலே!
முதன் முதலாய் பெற்றவர் நம்மால் மகிழ்கையிலே!

முதன் முதலாய் சிரித்து மகிழ்கையிலே!
முதன் முதலாய் பரீட்சை எழுதுகையிலே!
முதன் முதலாய் துக்கத்தில் ஆழ்கையிலே!
முதன் முதலாய் நினைவுகள் அலைமோதுகையிலே!

முதன் முதலாய் ஒன்றை செய்யத்துணிகையிலே!
முதன் முதலாய் வெற்றியீட்டுகையிலே!
முதன் முதலாய் தோல்வியடையிலே!
முதன் முதலாய் வீழ்ச்சி காண்கையிலே!

முதன் முதலாய் எமக்குப்பின் ஒருவர் நிக்கையிலே!
முதன் முதலாய் என்றாலே!
இதுவனைத்தையும் எம்மால் மறந்திட முடியுமா!
முதன் முதலாய் நடந்தவை நிரந்தர நினைவுகளாகின்றனவே!



## ஒன்றை நினைக்கையில்!

ஒன்றை நினைக்கையில்!
மற்றொன்று நடக்கையில்!
பல பக்கமாய்!
அது விரிந்துகிடக்கையில்!

ஒன்றைத்தான் சிந்திக்கவே!
இமைமூடித்திறப்பதற்குள் மாற்றங்களே!
காதுக்குக் கிட்டியது !
கைக்கு எட்டாமலே செல்ல!

நிச்சயமென்று நினைக்கவே!
கைநழுவியது செல்ல!
மிஞ்சியதுதான் என்ன?
கண்ணீர்த்துளிகள் விடையாய் அமைய!

அடுத்தமுறை சரிவருமென
இன்னுமொரு நம்பிக்கை
அதன் வீச்சு!
மீண்டும் கிடைக்குமா?

ஒன்றை எதிர்பார்க்கையில்!
மற்றெல்லாம் நடந்துகொண்டிருக்கையில்!
மனதுக்குள் ஏமாற்றம்!
பொதிந்து கிடக்கையில்!

மற்றவரெல்லாம் மகிழ்கையிலே!
எம்மாலது முடியாததேனோ?
எமக்குப் பின்னால்
பலர் துணையாய் நிற்கையிலும்!

எம் வலியை
யார் புரிவார்?
சரியான வார்த்தைகளை
யார் தொடுவார்?

இழந்தது மீண்டும்!
நமக்குக் கிடைத்திடுமா?
அடுத்த சாதனையை
படைப்பது நாமா?

உறுதியை தளராமல்
நாமும் தொடர்கின்றோம்!
அடுத்த வெற்றி
நம்பக்கம் சேர்ந்திடுமே!

## வெட்ட வெளி

எட்டித் தொடவோர் வெளியுண்டு!
அதை தட்டிப்பறித்திட மற்றவருமுண்டு!
பட்டுத் திருந்திய பறவையுமுண்டு!
மகிழ்ச்சியாய் வாழ்ந்திட வெட்டவெளியுமுண்டு!

வெட்டவெளியில் வெட்டியாய் இருப்பவருமுண்டு!
ஏசியே நம்மை வேலை செய்திடவைப்பவருமுண்டு!
அன்புத் தோளால் அரவணைப்பவருமுண்டு!
எப்போதும் துணையாய் நிற்பவருமுண்டு!

சிரித்து மகிழும் வெளியுமுண்டு!
இன்று அவ்வெளிக்கு சிறப்புமுண்டு!
நித்தமுமாய் நமக்காக ஏங்குபவருமுண்டு!
கண்ணிமையாய் காப்பவருக்கும் மனவெளியுண்டு!

எமக்காக உழைத்திடும் அவ்வெளியினிலே!
இன்ப ஊற்றுமின்று பெருகட்டுமே!
அன்பு முத்தங்கள் எப்போதுமுண்டு!
கவிதையிலின்று உமக்கோர் வாழ்த்துமுண்டு!

என் வெட்டவெளியினிலே என்று கூறுகையில்!
அது இங்கு பொருந்தாதே!
ஏனெனில் எமக்குப் பின்னால்!
சுற்றும் வெளிகள் பலவுமுண்டே!

## தந்ததோ மாற்றம்!

நொடிப்பொழுதினில் வந்திடும் மாற்றம்தனை
சிந்தித்து செயற்படுத்துவதற்குள்
இன்னும் சில நொடிகள் பறந்துசெல்ல!
தந்ததோ மாற்றமென பெருமூச்சுவிட!

தந்ததோ மாற்றம் தரமொன்று உயர்ந்திட!
24 மணித்தியாலங்கள் தொடர்ந்தே பணியாற்றவே!
புது வாய்ப்புகளுக்கும் வழிகள் தந்திட்டதே!
பலரை காற்றலையூடே இணைந்திடவும் வைத்ததே!

ஆற்றலை கண்டிட்டு அதை மேம்படுத்திட!
கையிலே ஊடகத்தை தந்திடவும் வைத்ததே!
காற்றலையூடே நம் ஆளுமையை வளரத்திடவே!
பாராட்டும் ஊக்கமும் பல பக்கமாய் இணைந்திடவே!

இன்று இக்காற்றலையூடே இவ்வாழ்த்துகளும்
இணைந்தே இங்கு ஒலிக்கட்டுமே!
ஏணிப்படிகளாய் காற்றலையைக்கொண்டே ஏறிநிற்கிறோமின்று!
வெற்றிபடிகளாய் இன்னும் இவை மாற!

இன்னும் சில வருடங்கள் வேண்டுமா?
மாற்றம் இன்றே கண்டாலே!
கிடைக்கும் நன்மைகள் எமக்கே!
அப்போ தந்ததோ மாற்றம் தானே!



## விழியினிலே!

விழி மூடித் திறக்கையிலே!
எத்தனை எண்ணங்கள் எமக்குள்ளே!
பாடசாலையில் பாடநேரமும் யுகங்களாய் அமைய!
வேகமாய் வீடுசெல்ல துடிக்குமே மனதும்!

வீதியின் நடுவே நடந்துசெல்ல!
மக்களும் எம்மை தாண்டிச்செல்ல!
சிந்தையில் இன்னோர் இடத்தில்!
இருப்பதும் இங்கே சரியா?

நேர ஓட்டமும் வேகமாய்ச்செல்ல!
இந்த நிமிடம் அந்த நினைவில்!
உறைபனிபோல் மனதிலே உறைய!
விநாடியும் அப்படியே நிற்கிறதே!

ஆயிரம் நினைவுகள் மனதினிலே!
அதை நினைத்திட இனிக்குதே!
பற்பல கனவுகளும் விழிகளிலே!
இங்கு பலமொன்று பிறக்குது! - எம் பின்னே!

## முடிவில் இன்னொன்று!

முடிவில் இன்னொன்று!
உதிக்குது பாருங்கள்!
ஒன்றை முடிக்கையிலே!
இன்னொன்று பிறக்கிறதே!

கையை விட்டுச்செல்கையிலும்!
ஏமாற்றம் இருக்கையிலும்!
வாய்ப்புமொன்று கிடைக்கையிலே!
முயல்கிறோமேயதை முடிப்பதற்காய்!

வேகமும் பற்றிக்கொள்ளவே!
ஈடுபாடும் அதிகரிக்கையிலே!
இறுதியிலே வெற்றிகரமாய்!
அத்திட்டத்தை முடிக்கையிலே!

கையொப்பம் இடுகையிலே!
பேனாவை திறக்கையில்!
எழுதி முடிக்கையில்!
நினைவுகளும் அலைமோதினவே!

கோப்பை மூடுகையில்!
பெருமூச்சு விடுகையில்!
முடிவாயிது அமைகையில்!
இன்னுமொன்று ஆரம்பமாகிறதே!

## மனதிலே ஒலித்தது!


காற்றிலே வார்த்தைகள் பறக்கின்றன!
இருந்தும் காற்றிலே ஒலிக்கின்றன!
மனதிலே சந்தோசம் பொங்குகையில்!
மற்றவர் கூறியவை தடுக்கிறது!

நெருங்கியவர் வாயால் கூறுகையில்!
அம்புபோல் அதுவும் பாய்கிறது!
மகிழ்ச்சியும் ஒருபோதும் நிலைப்பதில்லை!
அது காற்றிலசையும் காற்றாடியே!

துளிர்த்திடும் நிமிடங்களில் வீழ்ச்சியாய் அமைகிறது
ஏமாற்றம் ஆழமாய் பதிகிறது!
நமக்கு நன்மைகள் செய்பவர்கூட!
இப்பட்டியலில் முதலிடமும் பிடிக்கிறார்கள்!

வேதனைகள் பலவும் இருக்கையிலே!
சோகமான சுமையாய் அமைகிறதே!
காதிலே மீளவும் ஒலிக்கிறதே!
நம்பத்தான் அவர்களை மனம் வருமோ?

தந்திட்ட வேதனையை உணர்ந்தாரோ?
அல்ல நொடியிலே சென்றது!
மறுகணம் மறந்தோம் என்றாரோ?
பாசபந்தம் உடையாது என்றாரோ?



## பழகிட... பழகிட...

ஆரம்பம் என்பது கடினம்தான்!
ஆரம்பமாகியதை தொடர்வதும் அதைப்போன்றே!
விண்ணை தாண்டிய உயிர்ப்பொன்று!
பிறக்குமே எங்கோ எமக்குள்ளும்!

பழகிட பழகிட பிடிப்பொன்று!
இறுக்கமாய் பற்றிட வழிவகுக்கும்!
பிடித்தவை கூட வெறுப்பாகும்!
நேரமொன்று கிடைக்காமல் போனாலே!

பின்வரிசையில் இருந்தே முன்னோக்கி!
வேலை பார்க்கும் வழக்கமிங்கே!
கிடைத்திட்ட விடயத்தில் கண்ணாகவே!
இருக்க வேண்டியதும் ஆலோசனையே!

பழகிட பழகிட இலகுதானே!
பிடிப்பும் அதிலே வந்தால்தானே!
சாதனையும் இங்கு புரிந்திடவே!
வாய்ப்பும் நமக்கு கிடைத்திடுமே!

## அமைதியிலே உறைகிறதே!

இருளாய் உலகம் இருக்கையிலே!
ஒளியாய் ஒன்று அமைகிறதே!
சிந்தனைக்காய் நிமிடங்கள் கிடைக்கையிலே!
திருப்தியாய் பின்னே பார்க்கிறோமே!

பரபரப்பாய் உலகம் சுழல்கையிலும்!
அமைதியை தேடுது எம்மனது!
பாராட்டும் மற்றவர் கூறுகையில்!
சிரிப்பும் மகிழ்வை உருவாக்குது!
அமைதியிலே பலமும் இருக்கிறதே!
சிலரின் சிரிப்பினிலே உறைகிறதே!
ஊக்கம் கொடுப்பார் மறைமுகமாக!
அதை விளங்கினாலிங்கு வெற்றிதானே!

## ஆழத்தின் புதையலில்!

இருளுக்குள் புதைந்திருக்கும் இரகசியங்கள் பல
இருந்தும் மனதினிலே விடையில்லா கேள்விகளும் பல
சொல்லவும் முடியாமல் துடிக்கின்ற நிலமைகளும் சில
கூடியே இருப்பவர்களுக்கும் புரியாத புதிர்களும் பல

மனதென்னும் சமுத்திரத்தின் ஆழமும் புரியாதே
ஆழத்தில் நிகழ்வதும் உடனே தெரியாதே
கவலைகள் பல இருந்தும் சிரிப்பதும் புரியாதே
கண்ணீர்துளிகள் பதிலாய் அமைவதும் தெரியாதே

ஆயிரம் கவலைகள் அனைவருக்குள்ளும் உண்டே
அது சமுத்திரத்தைப்போல் ஆழமும் கொண்டதே!
இன்பமானசுமைகளாய் எதையும் கொண்டாலே!
இடர்களும் வராதே, தடைகளும் கிடையாதே!

மௌனத்தின் விடையிலே புதிர்களும் உண்டு!
மறக்கமுடியாமல் இருக்கும் இழப்புகளின் நினைவுகளும்!
இனிப்பான நினைவுகளும் தளராத நம்பிக்கையாகும்!
நாளை இத்தோல்விகளும் வெற்றிக்கு வழிவகுக்கும்!

## வாய்ச்சுப் போச்சு!

அக்கா தம்பி உறவுக்குள்ளே!
ஒட்டிப்போட்ட அன்புப்பந்தம்!
வாய்ச்சுப் போச்சு அவருக்குமிப்போ!
என்நேரமும் உதவி கேட்க!

அன்பாகவே அதையும் செய்ய!
அடுத்த கணமும் மீண்டும் கேட்க!
வாய்ச்சுப் போச்சு இங்கு!
கூட வீட்டுவேலையெனக் கூற!

குறும்படம்போல் சிறு குறும்புகள் செய்ய!
மறு கணமே அது சிரிப்புமூட்ட!
விட்டுக்கொடுப்போ இதிலே ஒற்றுமைக்கு!
வாய்ச்சுப் போச்சுது நீளாமலுமிது செல்ல!

## விடியலின் பிறப்பிது

புது விடியலின் பிறப்பிது!
நூற்றாண்டுகள் காண்கின்ற விடையது!
வரலாற்றிலிருந்து இது புரியுது!
நம்பிக்கையின் பயிரது விளையுது!

பல விருட்சங்களின் உழைப்பது!
பலரும் அறியாத புதிரது!
நினைத்தாலும் எம்மால் சாதிக்கமுடியாதது!
நினைத்தாலும் அது முற்றுப்பெறாதது!

விடைகாண விழிம்பில் நிற்கிறது!
முற்றுப்புள்ளி வைக்க இயலாதது!
நேரமும் காலமும் ஒன்றியே வருகிறது!
முடிவல்ல இதுவோர் ஆரம்பமாகிறது!
முடிவிலே மனதிலென்ன தோன்றியது?

## சும்மா இரு...!

அன்றாடம் நாமும் எம்மை இழக்கையிலே!
விடுமுறையும் வந்து எம்மை விழுங்கையிலே!
சும்மா இரு என்று மனமும் கூறுகையிலே!
அம்மாவும் எம்மை பேசிக்கொள்கையிலே!

சும்மா இங்கு பிரச்சனை வருகிறதே!
சும்மா இருப்போம் என்று நினைக்கையிலே!
சுமைகளை தாங்குவதே வாழ்கையின் விடையென்கையிலே!
சும்மா என்று அதை விட்டுவிடலாமோ?

ஓய்வுகளும் வாழ்விலே எமக்கு வேணுமென்கையிலே!
சும்மா இருக்கத்தான் எம்மால் முடியுமோ?
அன்றாடம் வேலைகள் எமக்காக காத்துநிற்கையிலே!
முயற்சியாய் இருப்பதே முதற்படி ஆகிறதே!

## கேள்வியிலே!

கேள்வியிலே பிறக்கிறதே விஞ்ஞானம்!
நுட்பத்தினுடே அறிமுகமாகியதே இதுவும்!
கனைகள் பலவிதமாய் விரிகையிலே!
பல கோணச்சிந்தனையும் எமக்குள்ளே!

நேரத்தின் துளியினிலே இதுவும் தோன்றுகிறதே!
சிந்திய மழைத்துளிபோல் வாழ்வை நிறைக்கின்றதே!
மறக்காமல் அதையும் கட்டி காக்கிறதே!
பாவணையிலும் அதிகமாய் இருக்கிறதே!

வருடங்கள் கடந்தும் வரலாறு படைக்கிறதே!
அழிவில்லா சொத்தாய் அழியாமல் இருக்கிறதே!
முகவரி இழந்தாலும் அறிமுகம் ஆகிறதே!
புதுப்பொருளாய் விற்பனையாகி புத்துயிர் கிடைக்கிறதே!

## ஆரம்பம்...

ஒன்றை நினைத்த போது!
கண்டது அதுவோர் ஆரம்பம்!
அனுபவம் இங்கே இல்லையென்றால்!
தோல்விகளையும் இங்கே முகவரியாகுமே!

மனதில் எண்ணியதை சாதித்து!
முடிப்பதற்குள் பற்பல இடையூறுகள்!
சூழலின் நிலமையைக் கொண்டே!
இதில் கால்பதிக்க வேண்டும்!

இலட்சியம் இல்லாமல் சாதனையெங்கே?
வீழ்ச்சிகள் காணாமல் வாழ்வெங்கே?
ஒன்றை இழிக்காமல் இங்கே !
ஒன்றும் தான் இல்லை!

கண்ணீர் இல்லாமல் வெற்றியில்லை!
எதிர்பார்ப்பவை பகல்கனவாக அமைய!
மனதிலே நின்றிட்ட இலட்சியக் கனவை!
காரியம் மூலம் சாதிக்க!

வாழ்கையிலில்லா வசந்தமா இனிவீசும்!
இன்பம் இல்லாமல் வாழ்வுமில்லை!
அரவணைப்பு பாசமில்லாமல் உலகமுமில்லை!
ஆரம்பமாகிறதே இங்குமோர் அத்தியாயம்!

## பந்தின் வடிவினிலே!

உருளும் உலகிலிங்கு
உருண்டையாலும் தொல்லையிங்கு
கோல்களைப் போட்டிட
பலருக்கும் தயக்கம் இங்கு

பந்தின் வடிவத்திலே
இருக்குது அதுவுமென்பர்
பந்துபோல் எம்வாழ்வும்
சுழலுது இப்பாரினிலே

சிலரின் உதைப்பினிலே
முயற்சியும் உருவாகுதிங்கு
ஓட்டத்திலே உழைப்பதுவும்!
வெற்றியாய் மாறுதிங்கு!

முயற்சியிங்கு இல்லையெனில்!
வளர்சியையெப்படி காண்பதிங்கு!
உச்சியையிங்கு தொடுவதற்கு!
எதுதானிங்கு வேண்டுமென்கிறது!

2010ம் ஆண்டினிலிங்கு
தென்னாபிரிக்க மண்ணிலுமின்று!
யேர்மனணியும் தட்டிச்செல்லுமா
உலகக்கிண்ணத்தை இன்று?

(உலக உதைபந்தாட்டப் போட்டி 2010 எழுதிய கவிதை)

## ஓட்டம் ஓட்டமாய்!

2008 சீனா ஒலிம்பிக் போட்டி

ஒலிம்பிக் போட்டியிலே ஓட்டம் ஓட்டமாய் காத்திருந்தோமே!
மறக்கவிடாமல் செய்ததும் இதைச்சில மணித்துளிகள்
வாழ்வின் ஓட்டம் சாதனைப் படைப்பாய்
வேகத்தின் பதிவாய் உலகில் இன்று

100 மீற்றரில் படைத்தாரே Bolt ஓர் உலகசாதனையை
Jamaica நாட்டவராய் ஜமாய்த்தாரே இவரும்
100, 200 என்றாரே ஓட்டப்பயிற்சிபோல் ஓடி முடித்தாரே!
புதிதாய் ஒலிம்பிக்கில் முத்திரை பதித்தாரே!

உலக சாதனை மூன்றுதனைப் படைத்தாரே!
உலகின் வேகமான மனிதரும் ஆனாரே!
இவ் வெற்றி தன் பயிற்சியாளருக்கே என்றாரே!
ஈழத்தமிழரை அணைத்துவைத்தே நன்றிதனைப் பகிர்ந்தாரே!

வாழ்வின் ஓட்டமாய் நாமும் ஓடிட வேண்டும்!
காற்றை கிழித்தே வேகத்தை கூட்டிட வேண்டும்!
மனதின் இலக்கை பின் தொடர்ந்திட வேண்டும்!
மணித்துளியைக் கூட பயன்படுத்திட வேண்டும்!

## மறக்க முடியாத Hamburg இன் விளையாட்டு!

மறக்க முடியாதது மகிழ்வும் தந்தது
நினைவில் எண்ண முடியாதது
நினைக்க வைத்தது இதுவுமே!
உலக முதலாம் இடத்தில் இருக்கும்

அந்த வீரருடன் விளையாடிய அனுபவம்
மனதிற்குள் மகிழ்வும் தந்ததுவே!
ரோட்கவெடருடன் (Rodger Federer) கம்பேக் மைதானத்தில்
கழிப்போடு ஆடிய ஆட்டம்

கணப்பொழுது பந்தின் வேகம் கடுகதியாய் வந்திடவே!
அடிக்க அடிக்க அனுபவம் வந்திட்டதே
அதனால் உயர்வும் கூடவே பிறந்ததே!
அதிஸ்டம் என்பது நினைக்காமல் வருவது

ATP Hamburg 2007 ரெனிஸ் விளையாட்டு
என்றுமே என்னை நினைக்க வைக்கிறது
மறக்க முடியாத விளையாட்டாய்
மனதிலே அழியாத பதிவாகியதே!

## *Ein Blich nach oben!*

*Blickt man nach oben,*
*frage man sich,*
*wie man fliegt,*
*verfliegen so viele Minuten*

*Fliege man in einem Flugzeug,*
*fliegt es mit der Flugkraft*
*es vereint sich mit den Gesetzen der Natur,*
*ohne dass es nicht fliegen könnte.*

*Gesetze gibt es dort,*
*auch Gegenreaktionen gibt es dort*
*erreiche man im Leben etwas,*
*so ist dort auch ein Verlust.*

*Ist man in voller Freude,*
*ist irgendwo jemand in tiefster Trauer*
*denke man das Ende sei nah,*
*für viele ist dies erst der Anfang.*

*Versuche man hoch zu fliegen*
*so setze man sich ein Ziel*
*so gibt es welche es erreichen*
*und welche es nicht erreichen.*

*Siehe einer nach oben,*
*betrachte er den breiten Himmel*
*denke er über seinen Verlust nach*
*sage er sich, dass dies das Leben sei*

*Er versuchte eins hoch zu fliegen,*
*doch verlor er bei diesem Versuch*
*ohne Ruhe versuchte er es immer wieder*
*erreichte nun schließlich sein Zielflugzeug*
*und gewann im Leben.*

## *Welchen Sinn haben Fragen?*

*Auf dieser Welt gibt es viele Fragen.*
*100 Fragen stellt man sich jeden Tag,*
*doch nicht jede wird beantwortet.*
*Um manche Fragen zu beantworten,*
*bricht man in Schweigen aus!*
*Denn für manche Antworten*
*sucht man den richtigen Zeitpunkt!*
*Für viele Fragen gibt es einfach keine Antworten,*
*andere muss man sich sein Leben lang ersuchen.*
*Einige Antworten können den Sinn deines Leben ändern!*
*Es wird sich dann die Frage stellen,*
*ob es wohl unser Leben zu leben hindert*
*und unser Leben sich in einem Albtraum verändert.*
*Oder ob man es als einen neuen Wettstreit hinnimmt*
*und das Leben zu seinem Besten macht,*
*liegt immer bei dir!*

## *Blüte für Blüte !*

*Blüte für Blüte blüht eine Blume,*
*jeder hat einen Wunsch auf diesen,*
*wenn dies auch dessen Wunsch erfüllt,*
*genießt man dessen Schönheit des Lebens.*

*Blühen wir wie eine Blume,*
*lassten auf uns viele Erwartungen,*
*erstrecken wir uns in die Höhe sind, sie wie Blätter mit uns,*
*doch fallen wir auf den Boden,steht niemand in unserem Schatten.*

*Einige umranken uns wie Blätter,*
*andere geben sich für uns auf,*
*haben wir eine Idee sind sie voll mit dabei,*
*auch wenn dies einmal vergeht,stehen sie hinter uns.*

*Auch bei einem treppenweisen Aufstieg gibt es Rückschläge,*
*auch wenn wir wenig Sonnenlicht bekommen,*
*freuen wir uns,da wir uns nun gefunden haben,*
*denn wir gehören für immer zusammen.*
*Es blüht hier doch eine Freude!*

## *Unerwartet....*

Es gibt sehr viele Hürden im Leben,wenn man das Leben überstehen will.

Abkürzungen gibt es keine. Denn man muss durch pure Willenskraft Stärken gewinnen.

100 Gründe würde es geben,warum man hier auf dieser Welt ist,aber man wird sie alle nicht erfahren.

Manchmal denkt man,warum man auf dieser Welt ist,für wen man da ist,wenn sich ein Gefühl der Leere sich entwickelt.

Erinnerungen können wieder kommen,wo man das Leben einfach genossen hat,manche würden immer einem Fehlen bis man sein Ziel erreicht hat. Die Zeiten, die man zusammen verbracht hat,sind plötzlich zu Ende gegangen, nur begreifen möchte man vieles nicht.

Denn vieles geschieht unerwartet.

Zufälle gibt es mal hin und wieder,über manche ist man sogar überglücklich,dass man nur daran immer wieder zu denken versucht.

Doch einige Zufälle gibt es im Leben über die man nicht froh ist,die man nicht zu begreifen wagt,da letzendlich nichts in unserer Hand liegt.

# வாழ்த்துரை

இலட்சியப்பாதையில் எண்ணத்தின் துளிகள் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக்க மகிழ்வு அடைகிறேன்.

தாய்த்தமிழை அன்னிய தேசத்தில் கசடறக் கற்று கனிவாக கவிதை புரியும் எழில் தமிழ் அரசி ஷறீகா சிவநாதன். இவரது தமிழ் அறிவாற்றலின் ஆழத்தை பல விழாக்களிலும், வானொலியிலும் கேட்டும் மகிழ்ந்தோம். நான் அவுஸ்ரேலியா சென்றிருந்தபோதும், இவரின் பெயர் பேசப்பட்டது. அவுஸ்ரேலியாவில் sbs வானொலியில் இவரின் பேட்டிகேட்டு பலரும் இவரின் தமிழ் அறிவை வியந்து பார்த்தனர். அதை அறிந்து அக மகிழ்ந்தேன். யேர்மனியில் பிறந்து அழகாக தமிழ் பேசி அடுக்கடுக்காய் தமிழின் வீச்சிலே கவியே புனைந்து செல்லும் அவரது ஆற்றல் போற்றப்பட வேண்டியது.

இன்று தமிழ் அறிவின் ஒரு அழகாக ஒரு கவிதைத் தொகுதியை வெளியிடும் செய்தி கேட்டு பூரிப்பு அடைகிறேன். இவ்வளவு நாளாக தமிழ் வளர்த்த பெரியோர்களை நன்றியுடன் நோக்குகிறேன். இவர் வெற்றிமணியின் பல விழாக்களில் பங்கு கொண்டு சிறப்பித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 2008 ஆண்டு சிறந்த தமிழ் அறிவிப்புக்கான வெற்றிமணி விருதும் வழங்கப்பட்டது. பத்திரிகைகளிலும் சில கவிகளை வரைந்தவர்.

இன்னும் தாய்த்தமிழை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லும் பாங்கு இவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஷறீகா மேலும் மேலும் வளர்ந்து தமிழுக்கும் தொண்டு செய்ய வேண்டுமென வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

அன்புடன் வாழ்த்தும்
வெற்றிமணி சிவத்தமிழ ஆசிரியர்
கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் (B.F.A)



பட்டம் பெற்ற போது

# ஷறீகா சிவநாதனின் திறமைகள்

செல்வி ஷறீகா சிவநாதன் யேர்மனியில் பிறந்தவர். தந்தை பெயர் சிவநாதன் தாயார் பெயர் நகுலா சிவநாதன். இவருக்கு ஒரு தம்பி உண்டு. அவர் பெயர் ஷறீகன் சிவநாதன்.

இவர் தற்போது யேர்மனியில் Freiherr- Vom- Stein- Gymnasium-Lünen இல் ஆண்டு 12 இல் படிக்கிறார். தமிழ்மொழியில் இளம் ஆசிரியையாகவும் இருக்கிறார். மெய்வல்லுனர் விளையாட்டு, ரெனிஸ் விளையாடுவது, நூல்களை வாசிப்பது இவரின் பொழுது போக்காகவும் உள்ளது. இவர் பேச்சுப் போட்டியிலும் கவிதைப்போட்டியிலும் பல மேடைகளைக் கண்டு வீச்சுப் பேச்சாளராக இருப்பதும் பெருமைக்குரியது. இவர் டொச் பாடசாலையில் நடனக்குழவின் பயிற்றுனராகவும், லண்டன் தமிழ் வானொலியின் யேர்மனிய செய்தித் தொகுப்பாளராகவும் உள்ளார்.

# எண்ணத்துளிகள்...



புலம்பெயர்ந்து வாழும் தமிழரின் தலையாய பணியை ஷஹீகா முன்னெடுத்துள்ளார். அவரது இயல்பான ஆற்றல்கள் இப்பணியைச் செய்வதற்கு உறுதுணையாக நிற்கின்றன.

**- பேராசிரியர் அ.சண்முகதாஸ்,**
யாழ் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர்

அவரது கவிதைகளிலே இளைய தலைமுறையினரின் மனப்பாங்கு தெட்டெனத் தெளிவாக உள்ளன. கற்பனை வளம் புரண்டோடுவதைக் காண முடிகிறது. ஷஹீகாவினால் புலம் பெயர்ந்த தமிழ் உலகு பெருமையுறும் என்ற நம்பிக்கை எமக்கு நிறையவே உள்ளது.

**- பொ.கனகசபாபதி**
முன்னாள் மகாஜனக்கல்லூரி அதிபர், கனடா